**கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையத்தினை ஸ்தாபித்தல் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினை திருத்தியமைத்தல் செயற்திட்டம் - 2017**

---

கொழும்பு தொழில்சார் பயிற்சி நிலையத்தினை ஸ்தாபித்தல் மற்றும் கம்பஹா தொழில்நுட்ப கல்லூரியினை திருத்தியமைத்தல் செயற்திட்டத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 யூலை 23 ஆந் திகதிய 2013033/எஸ்எல் - எஸ்ஆர்ஜ-22 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் கீழ் இச் செயற்திட்டம் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி, திறன்கள் அபிவிருத்தி, தொழில்சார் பயிற்சி மற்றும் கண்டிப் பாரம்பரிய அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் மற்றும் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு மற்றும் கம்பஹாவில் தொழில்சார் பயிற்சி நிலையங்களை ஸ்தாபித்து அபிவிருத்தி செய்வதும் தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் கொரியா நிபுணர்களின் உதவியுடன் தொழில்சார் வளர்ச்சி மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தியை தூண்டுவதில் முக்கிய பங்காற்றுவது செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். மேற்கூறப்பட்ட தொழில்சார் பயிற்சி நிலையத்திற்காக உபகரணம் மற்றும் வசதிகளை வழங்கல் மற்றும் கொரியாவில் கரை கடந்த பயிற்சிகளை வழங்கல் கொரியாவின் நிபுணர்களை வெளியேற்றல் புத்தக அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிக்காக ஆலோசனை சேவைகளை வழங்கல் போன்றன செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் உள்ளடக்குகின்றது. செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,172 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 31.41 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 3,460 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 26.05 மில்லியன் பொருளாதார அபிவிருந்தி கூட்டுறவு நிதியத்தில் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 நவம்பர் 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2016 நவம்பர் 18 அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்த்திருந்தது. பின்னர், செயற்திட்டத்தின் காலப்பகுதி 2018 திசெம்பர் 31 வரை நீடிப்புச் செய்யப்பட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு

செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(எ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2017 திசெம்பர் 31 இல்

உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும் மற்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2017 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2017 ஆம் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2017 ஆம் ஆண்டின் போது | | 2017 திசெம்பர் 31 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா. மில்லியன் |
| ஈடிசீஎவ் | 26.05 | 3,461 | 3.85 | 1.69 | 219.60 | 8.28 | 1,076.60 |
| இலங்கை அரசாங்கம் | 5.36 | 711 | 0.92 | 0.50 | 65.50 | 0.86 | 112.00 |
| **மொத்தம்** | **31.41** | **4,172** | **4.77** | **2.19** | **285.1** | **9.14** | **1,188.60** |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2013 நவம்பர் 19 ஆன செயற்திட்டத்தின் செல்லுபடியாகும் திகதியிலிருந்து 36 மாதங்களிற்குள் பூர்த்தியாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எனினும், செயற்திட்டத்தின் காலப்பகுதியானது கட்டிட நிர்மாண வேலைகளிற்காக ஆலோசனையாளர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்தல் மற்றும் வேலைக்கமர்த்துவதிலுள்ள காலதாமதங்கள் மற்றும் பயிற்சி புத்தகங்களின் அபிவிருத்தி மற்றும் முகாமையாளர் மற்றும் ஆசிரியர்கள் ஏனையோர்களிற்காக கரை கடந்த பயிற்சியை வழங்கல் வழங்கல் போன்ற ஏனைய நடவடிக்கைகளாலும் செயற்திட்ட காலப்பகுதி 2018 திசெம்பர் 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 46 சதவீதமாகிவிருந்தது. மேலும், தொழில்சார் பயிற்சி நிலையம் மற்றும் கம்பஹாவிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள கட்டிடங்களின் நிர்மாண வேலைகள் 2018 யூன் 29 இல் பூர்த்தியாக்குவதற்கு 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலைகளின் பௌதீக மற்றும் நிதிசார் செயன்முன்னேற்றம் முறையே 34 சதவீதம் மற்றும் 24 சதவீதமாகவிரந்தது. செயற்திட்டத்தின் அமுலாக்கல் திட்டத்தின் பிரகாரம், பயிற்சி புத்தகத்தின் அபிவிருத்தியின் கீழான வேலைகள் 2017 செப்தெம்பர் 30

அளவில் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அதற்கான வேலைகளின் 50 சதவீதம் மட்டுமே மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பூர்த்தியாக்கப்பட்டிருந்தது.

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் சிவில் பொறியியலாளர் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் முறையான அங்கீகாரமில்லாமல் 2017 மார்ச் இலிருந்து ரூபா 100,000 மாதாந்த மிகையூதியத்தில் நியமிக்கப்பட்டிருந்தார். எனினும், 2015 மே 07 ஆந் திகதிய கடிதத்தில் முகாமைத்துவ சேவைகள் திணைக்களமானது அமைச்சின் திறன்கள் துறை அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட மேலதிக பதவியணியினூடாக மேவுகை செய்யப்பட வேண்டுமென அறிவித்திருந்தது.

(ஆ) 2016 மார்ச் 26 இன் 1/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.2.5(அ) பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு 2016 திசெம்பர் 10 இல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட செயற்திட்ட பணிப்பாளர் போதியளவான அனுபவத்தினை கொண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், 2017 சனவரி 16 இல் வேலைக்கமர்த்தப்பட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் 2.2.9 ஆம் பந்தியின் பிரகாரம் தேறிய தகைமைகளை கொண்டிருக்கவில்லை.

### 3.4 நிதிசார் கட்டுப்பாடுகள் மீதான விடயங்கள்

நிதிப்பிரமாணம் 134(4) மற்றும் 2010 யூலை 26 இன் 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையினால் வேண்டப்பட்டதற்கிணங்க, வரிசை அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் மீதான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.